1028

உ

...ாத்திரப் பிரபந்தத் திரட்டு.

1932௵

கவிராஜ பண்டிதர்

...யப திம்மப்ப அந்தணர்.

உ

தோத்திரப் பிரபந்தத் திரட்டு.

இதில் சமயசங்கிலி ஸ்ரீவிநாயகர் மும்மணிக்கோவை,

ஸ்ரீ சிவபிரான் இரட்டைமணி மாலை,

திருமுருகன் பதிகம், ஸ்ரீ சர்வலோக நாயகி மாலை

யாதியன அமைந்துள்ளன.

இஃது

மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவரும், சேலம் நகரபரிபாலனக்
கல்லூரியின் தலைமைத் தமிழாசிரியருமாகிய கவிராஜ பண்டிதர்.
ஆந்திரக்காசியப திம்மப்ப அந்தணனர் அவர்களால்

இயற்றப்பட்டது.

சேலம் குகைவாசியும், தேவாங்ககுல திலகரும்,
இப்பிரபந்த ஆசிரியரது இயற்றமிழ்மாணவருமாகிய
திருவாளர். T. அண்ணாமலைச் செட்டியாரவர்களது
அரிய பொருளுதவியால்

செவ்வாய்ப்பேட்டை மாணிக்கவிலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

193[illegible]

Copyright Registered] [விலை 6 அணா.

"Honour to him to whom Honour is due"

To

Devanga Tilakam and Philanthropist

SRIMAN T. ANNAMMALAI CHETTIAR Avl.

Sincere Lover of the Tamils and Patron of

The Tamil Literature.

This Work

As token of Esteem and Love is Dedicated

By his Ardent Well-wisher & Guru The Author.

உ

பொங்கும் மங்களம் எங்குந் தங்குக.

3

உரிமையுரை.

கட்டளைக்கலித்துறை.

ஆன்ற செழுஞ்ச மயசங் கிலியம ராண்டவனும்
மூன்றுயர் நாட்டத்தன் மும்மணிக் கோவையிம் [முத்தி
யை நூல்
சான்றவ! நிற்கெழி லண்ணு மலையாய்! தகவமைத்தேன்
என்றுகொள் வாயணி சேலக் குகையம ரெம்மரசே. 1.

அறுசீர்க்கழிநெடியாசிரிய விருத்தம்.

மற்றுமதி புனைந்தவர னிரட்டைமணி
மாலையொடு மக்க ளானோர்
பற்றகல வருளுமுதற் குகன்முருகன்
பதமிசையிற் பாக்த சீர்த்தி
நற்றொடைசேர் பதிகமுமை மாலையெனு
மிவைதமையும் நயந்து நிற்கே
கற்றுயர்நற் பெருந்தகையாய்! கனிந்துரிமை
யாக்கினன்சீர் களுல வென்றே. 2.

தேவாங்ககுல திலகரும், சேலம் குகை வர்த்தகப் பெரும் செல்வவந்தராகிய திரு. M. S. தொட்டண்ண செட்டியாரவர்கள் திருப்புதல்வரும் இந்தத் தோத்திரப் பிரபந்தத்திரட்டைப் பெறுதற்குரிய செந்தமிழ்க்கலைவாணரும் இதனை யச்சிடற்குப் பொருளுதவி புரிந்த பரோபகார சீலரும், இப்பிரபந்த நூலாசிரியாது மாணவகரும் ஆகிய

திருவாளர். T. அண்ணாமலைச் செட்டியாரவர்களது

சிறந்த குணங்களைக் குறித்து இப்பிரபந்தத்திரட்டின் ஆசிரியர் பாடிய வாழ்த்துக் கவிகள் முதலியன.

நேரிசையாசிரியப்பா.

திருவளஞ் செறிந்த கருமுகி றவழ்ந்திடும்
பொருப்பினந் திகழப் பருப்பிடிக் குலத்தொடு
கூர்ங்கோட் டிருங்களி றூர்ந்திடுங் கவினார்
சேலச் செழுநகர்ப் பாலொரு பாங்கர்

வகையறம் வயங்குங் குகையெனு மூர்க்க
ணைப்புர வீகை தப்பா வாய்மை
யூன்றிய பத்தி யான்ற வொழுக்கஞ்
சிவனடி யாரைச் சிவம்போற் பேணி
யருவிருந் தாற்று மொருபே ருயர்குண
மெனுமிவை சான்ற மனுதே வாங்க
நற்குல மோங்க வெற்பக லவன்போல்
வந்திவ ணுதித்த முந்துசீர் வள்ளல்
மட்டிலாப் புகழ்சேர் தொட்டண வேந்தறன்
புண்ணிய மோருருக் கொண்டா லனைய
மைந்த னண்ணா மலையெனும் பெயரிய
பண்ப னென்பாற் பைந்தமிழ் நூல்பயின்
றிலகுமா ணவருட் டிலகம் போல்வான்
கருணை யறம்பணி வுருகிய பத்தி
யாதிய வருங்குண மார்ந்த பெருந்தகை
தண்டமிழ் நூற்சுவை கண்டுளம் வியப்பினும்
புலவர்க் குப்பொரு ளுலவா தளிக்கக்
கரக்கும் பொய்ம்மைத் திருவினர் நாணக்
கரவா தளிக்குங் கம்பி ரத்த
வீறுகொள் சிங்க வேறென் கற்பகத்
தேனுய ரிருநிதி தானே யெனத்தகு
முத்தமன் குமர வித்தக னெழுந்தரு
டலமலைச் சாரலி னகத்தே தானுவந்
தரியவோர் திருப்பணி புரிதல் வேண்டுமென்
றுன்னி நிறைபுனற் றுன்னிய தடமும்
பிந்தலில் வளஞ்சேர் நந்தன வனமு
மமைத்திசை பூண்டத னேடுபல் லன்ப
ராங்கிலக் கல்விக் கழக மமர்ந்து
தேர்ச்சிநன் கெய்தச் சீரிய பொருட்டொகை
யுதவி யுள்ளன னன்றியு முள்ளந்

தூய்மை யுறுமா றடியனேன் றொடுத்துள
விநாயகர் மும்மணிக் கோவை விமல
மாச்சிவ னிரட்டை மணிமாலைவேல்
முருகன் பதிகந் திருவம் பிகையெழின்
மாலை யாதிய மாலை யிரிக்குந்
தோத்திர நூல்களை யேத்து புகழ்சே
ரெழுதா வெழுத்திற் பதிப்பித் தேற்றிட
வேண்டு முழுத்தொகை யீண்டார் வத்துட
னுதவியே யென்று மழியா வொருதனிப்
பேரிசை யிப்பெரும் பாரி னகத்தே
நின்று நிலவ நிறுவினன் நீண்ட
வண்பொற் றாசும் வெண்பொற் காசு
மென்னுளங் களிக்க முன்னரு முதவிய
தண்ணளி பூண்டிடுந் தருமப் பிரபுவிவன்
சகலசௌ பாக்கியமுந் தழைத்து
வாழிநீ டூழி மாண்புடன் மகிழ்ந்தே. 1.

கலித்துறை.

உதவு வன்றுதி யோங்கிடு முயர்சிவ நூல்கள்
பதித்தி டப்பொருள் பண்புட னென்றெனைப் பரவி
நிதித்தி ரட்குவை நேயமோ டுதவிய நின்னை
யதிவ ளத்தமி ழன்னை மலை! நிக ராமோ? 2.

வஞ்சி விருத்தம்.

இன்றமிழ்த னெழில்வளந்
துன்றண் ணமலைத்தூய
அன்ப! நின்ற னறச்செய
லென்றும் வாழி யீண்டியே. 3.

உரையாசிரியச் சக்கரவர்த்தியும், தென்மொழி, வடமொழிக் கடலை நிலைகண்டுணர்ந்த பெரியாரும், உபயவேதாந்த நிபுணரும், எமது முழுவலன்புடைய உத்தம நண்பரும் ஆகிய

திருவல்லிக்கேணி பிரஹ்மஸ்ரீ

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரிய சுவாமிகள்

அவர்கள் அனுக்கிரகித்தருளிய

சிறப்புப்பாயிரம்.

நிலைமண்டிலவாசிரியப்பா.

மலர்தலை யுலகின் மலியிரு ளகற்று
மலர்கதிர் ஞாயிறுங் கலைமதி யங்கியுங்
கண்ணா வமைந்த கண்ணுதற் கடவுள்
தண்ணா ரடிமே னண்ணிய பத்திப்
பெருக்கமர் வுற்றுயர் விருப்பா லவன்புகழ்
சுருக்கா துரைக்குந் திருத்தே வாரமுங்
கோவை யாரும் பாவைப் பாடலும்
நாவிற் கொண்டு நவிலுஞ் சீரான்
சன்மதி முனியரு ளன்மதி முனிவ
னின்னருட் பவணந்தி யெனுநல் லோன்றரு
நன்னூ லோடு தொன்னூ லாருந்
தொல்காப் பியமா மொல்காப் புகழா
ரிலக்கணத் துறைகளு மிலக்கியக் கலைகளும்
நடரா சன்பா லமர்ந்து நன்னர்த்
தொடர்ந்திட் டுணர்ந்த கடற்றமிழ்த் தூயோன்
காசிப கோத்திரத் தாசற வுதித்தோன்
றேசுடன் றிகழும் மாசி லாசான்
செம்மைப் புலவன் திம்மப்ப வந்தனன்
உலகினர் சிறத்தி லுலவிய அன்புங்

குலவிடு பத்தியாஞ் சலதியுங் கொண்டு
சமய சங்கிலி யமைவுறப் பெரிது
கோயிற் கொண்ட மாயிரு யானைக்
கன்றின் மீதோ ரொன்றிய கோவை
மும்மணிப் பிரபந்தஞ் செம்மையின் மொழிந்து
மற்றுமத் தூய குற்றமில் கரிமுகன்
பின்னர்ப் பிறங்கிய மின்னிலை வேலோன்
முருகன் பதமிசைத் தெரிதரும் பதிகமுஞ்
சீர்தளை முதல நேர்படச் செப்பினன்
குணகடல் குமரி கணமுகி லணவு
மோங்குசீர்க் குடகம் வேங்கட மாமலை
யெனுநான் கெல்லையிற் றனிமொழி யாகுந்
தமிழினுக் குரிய வமிழ்தினு மினிய
சுவையுணர்ந் தியாவருந் துதித்திடற் பொருட்டே.

சாற்று கவிகள்.

தொல்காப்பிய மாதிய விலக்கணங்களையுஞ் சங்க நூல்களை யுமையமற நனித்துணர்ந்த பெரும்புலவரும், வடமொழியோடு சுட்டுரையெழுதல், உரையியற்றுதல், செய்யுளமைத்தல், கண்டனங்கண்டுண்மைக் கருத்தை வெளியிடலாதியவற்றிலும் சீரிய தேர்ச்சியுற்றவரும், எமதரிய நண்பருமாகிய

யாழ்ப்பாணம் பிரஹ்மஸ்ரீ சி. கணேச ஐயரவர்கள் இயற்றியவை

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

திருமகளி னருட்கடலும் பெயர்க்கடலு
மாகியவள் சீருக் கேற்ற
மருமகளி னுறைவிடமு மாஞ்சமய
சங்கிலிவாழ் வாத னிலத்

திருமகளின் முதன்மகவா மும்பன்முகப்
பெருமானுக் குவப்பத் தென்சொற்
பெருமகளி னணியனைய மும்மணியார்
கோவைதனைப் பிறங்கச் சூட்டி 1.

அதன்மேலு மிதமேவ வவற்கிளைய
முருகனுக்கு மழகார் பாவிற்
றுதிமேவு பதிகமெனுந் தொடைபுனைந்தின்
னருள்பெற்றான் றுலங்குங் கூடற்

பதிமேவு தமிழ்ச்சங்கத் தொருபுலவ
னெழின்முனிசிப் பல்கா லேச்சின்
மதிமேவும் பண்டிதனு கிச்சேல
நகர்வதியு மகிமை யாளன் 2.

வடமொழிதென் மொழியினுட னாங்கிலமுங்
கற்றறிவு வாய்ந்த தீரன்
இடமருவு முமைபாகன் கழலிணைக
டினம்பரவி யின்பம் பூண்போன்

றிடமுடனேம் பொறியடக்குங் காசிபகோத்
திரமுற்றுத் திகழுஞ் செம்மல்
புடவிபுகழ் மதிகூருந் திம்மப்ப
வந்தணப்பேர்ப் புலவ ரேறே. 3.

யாழ்ப்பாணம் பரமேச்சரக்கல்லூரியின் பேராசிரியரும், நுண்மாணுழைபுலமுடைய புலவரும், இலக்கணக்கடலும், சங்கநூற்களைப்போற் செய்யுளமைக்கு மாற்றன் மிக்க பண்டிதரும் எமதரும் பெறல் நண்பருமாகிய பிரஹ்மஸ்ரீ

நவநீதகிருட்டிண பாரதியாரவர்கள் இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஒருசமய சங்கிலியா கிலக்குமிசேர்
சமுத்திரத்தி னுண்மை ஞான

வருசமய மாப்பொழிமும் மதக்கோவை
முமமணிக்கோ வைசெய் தேத்திப்
பிரசநிகர் பதிகமொன்றை முருகனடிக்
கணிந்துநலப் பேறு பெற்ருன்
பரவுபுக ழாந்திரகா சிபன்திம்மப்
பையனெனும் பாவ லோனே.

சோதிட நூற்பயிற்சி மிக்கவரும், எமது சகோதர ரீனய பேரன்புவாய்ந்த நண்பரும், வடமொழி, ஆந்திரமென்ற இம்மொழிகளின் தேர்ச்சியோடு தென்மொழியில் வல்ல புலவரும், கவிதாரத்தினமும் ஆகிய சேலம் ஜில்லா வெள்ளாளப்பட்டி பண்டித பரம்பரை பிரஹ்மஸ்ரீ ஆந்திர அந்தணர்

எஸ். கிருஷ்ணசாமி ஐயரவர்கள் இயற்றியவை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஆரணத்தின் கலைபுணர்ந்தி யறப்பணியை
நிறப்படுத்து மையனி ராம
பூரணத்தின் வரத்துருவா யவதரித்துக்
கலைமிகுத்த புலமை யாளன்
வாரணத்தின் றமப்பனருள் தனிமதுரைத்
தமிழ்ச்சங்க மாட்சி மிக்க
காரணத்தி னூற்புலவன் மாபுரத்தான்
திம்மப்பக் கவிவ லோனே. 1.

பொருசமய முரண்சலித்துப் பதர்போக்கி
யதிற்றெளிந்த பொருளை மேலாய்
வருசமய மீதெனக்கை வந்தசிவ
சமயமென மதியோ ரேத்தும்
இருசமய நால்வாரி யமுதநுகர்ந் தியாவருமீ
டேறுமாறே

யொருசமய சங்கிலிவி நாயகர்மும்
மணிக்கோவை யோதி னானே. 2.

பூவுலகிற் சீரதிரா வடிகடவிர்த்
தேனேமதிப் புலவ ரெல்லாம்
பாவுலவு கணபதிப்ர பந்தங்க
ளிதுகாறும் பாடி வைத்தார்
தேவுலவு மவைபதிக மிரட்டை மணி
மட்டுமெனத் தெளிந்த தாலே
மாவுலவு மும்மணியாக் கோத்திதனை
யாத்துலகில் வைத்த வாறே. 3.

சேலம் செவ்வாய்ப்பேட்டை (காசுக்கடை) வணிகர்குலதிலகரும்
செந்தமிழ்க்கலைவாணரும் வைணவ சமய அன்பரும்,
எமதரிய நண்பருமாகிய திருவாளர் திவ்யகவி

T. சுப்பராய செட்டியாரவர்கள் இயற்றியவை.

கோச்சகக்கலிப்பா.

திருவளர்க்கு மலர்வாவித் திருப்பழனந் திகழ்செந்நெற்
கருவளர்க்கு முகில்கருதிக் கால்வணங்குந் தவநிலைகண்
டெரிவளர்க்குங் கரதலத்தோ ரியல்முழக்க வெதிர்முழக்கந்
தருசமய சங்கிலியே தருமமிகுந் தமிழ்நாடு.

எழுசீரடியாசிய விருத்தம்.

பண்ணிய பயிரிற் புண்ணிய மெனவே
படிவரு மறையவர் திலகன்
றிண்ணிய மனத்தன் றேய்வுறுஞ் சினத்தன்
றெளிந்தகல் லுணர்வின னெவர்க்குந்
தண்ணியன் மதுரைச் சங்கமு மதிப்பத்
தேர்தமிழ்ப் பண்டிதன் றலைமை

நண்ணியிச் சேல நகர்க்கலா சாலே
நயந்ததிம் மப்பைய நல்லோன் 2.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

சிவமே தழுவுந் திருவினன் றிகழி ராம சாமியையன்
றவமே தக்கா னெனவந்தோன் நடரா சையன் றமிழ்ச்சீடன்
அவமே செய்யா னருங்கலேயை யாக்கிப் படைத்திட் டாயபயன்
பவமே போக்கும் பனுவல்பயில் வெனக்கொண் டிறைவற்
[பணிவானல் 3.

இருவிகற்ப நேரிசை வெண்பா.

நற்சமய சங்கிலிவி நாயகன்மேற் சண்முகன்மேற்
சற்சமய சாம்பசிவன் றாளிணைமேற்—சொற்சமைத்துச்
சீரார் திம் மப்பையன் செய்ததமிழ்த் தோத்திர நூ
லாரா வமுதாகு மால். 4.

கலிவிருத்தம்.

முன்ன வற்கொரு மும்மணிக் கோவையே
பின்ன வற்குப்பெ ரும்புகழ்ப் பதிகமே
மன்னி ரட்டை மணியொளிர் மாலேயே
சொன்ன தாமிவன் சாம்ப சொருபற்கே. 5.

சென்னை, புரசைப்பாக்கத்திலுள்ள பெண்பாடசாலைத்
தமிழ்ப்பண்டிதரும், இந்நூலாசிரியரது
மாணவருள் ஒருவருமாகிய

ஸ்ரீமத் வே. வேங்கடரமண ஐயரவர்கள் இயற்றியது.

நேரிசை வெண்பா.

சத்தி சிவன்முருகன் றந்திமுக னென்றிவர்க்கு
வித்தகனுந் திம்மப்ப வேதியன்சீர்-முத்தணிந்தான்
மாலே யிரட்டைமணி மாலே யரும்பதிகங்
கோலமும்ம ணிக்கோவை கோத்து.

Select Opinions.

13

S. A. Aiyaswamy Chettiar, M. A; B. L;
Advocate,
Vice President, Taluk Board,
Municipal Councillor and
Senate Member.

Shevapet, Salem.

11—1—1933.

The Poem "VINAYAKAR MUMMANI KOVAI" by Mr. R. Thimmappa Iyer, Head Tamil Pandit, Municipal College, Salem. is a delightful one. The author is a great Tamil Scholar and the verses are of a high order. He seems to be an ardent admirer of the great Saiva Siddhanta writers and this is revealed by his references to their works in this poem. I do not profess to be a Tamil Scholar, but still I ean appreciate the beauty of this work. The fact that thc author singles out the Vinayakar at his native place is sufficient proof of the author's local patriotism. It is gratifying to note that he expresses his sense of gratitude to his patron and guru in the 5th and 6th stanzas respectively.

Rarely do we come across a whole work in praise of Vinayakar though generally a verse is devoted to him at the beginning of every work. The author tells us all about Siddhi Vinayakar in a pleasant way and I have no doubt that this poem will give the readers an interesting reading.

It may be mentioned in passing that a few recent archaeological research scholars are of opinion that Vinayakar was introduced into the Tamil Nadu only a thousand years ago from the Kalinga Nadu.

In conclusion I must heartily congratulate Mr. Thimmappa Iyer on his brilliant work and wish him every success in all such attempts.

(Sd.) S. A. Aiyaswamy.

15

This irattai-Mani-Mali (இரட்டைமணி மாலை) is a poem in antati-t-todai (அந்தாதித்தொடை) Consisting of 20 stanzas composed alternately in the two types, Venba and Kattalai-k-kalitturai.

When Man's innermost feelings as love, devotion and Bakti are stirred to their very depths they get them selves expressed in measured and harmonious language of melody which conveys the kind of emotion within This poem glitters like a transparent crystal through which is seen the exact nature of Mr. Thimmappa Aiyar's intense devotion to Sri Samba Sadasivam of Samaya sangili.

That the author is a profound scholar who possesses an intimate knowledge of almost all the standard works in Tamil Literature would be evident to any who simply glances through this poem.

This is one of the early and successful attempts of Mr. Thimmappa Aiyar in the field of versification and I am sure that in time to come he will become as great a poet as he is a scholar.

That this poem may serve the cause of Tamil Literature and be a source of unfailing inspiration to the devotees of the Lord is the hope and the wish of

(SD.) A. RAMASAMY GOUNDAR, M. A. L. T.
Principal, Salem College,
SALEM.

LONDON MISSION HIGH SHOOL,

SALEM.

12th December 1932.

It is with very great pleasure that I perused the "Ambika Malai" (the garland of verses on Ambikai, the divine consort of LordSiva)composed by my revered friend Pandit S. R. Thimmappa Aiyer, the Head Tamil Pandit of the Salem College. I am glad that an opportunity has presented itself to express my sincere admiration for the profound scholarship and deep poetic fervour of the learned pandit. I have known him as an assiduous student, critical in his studies, under the late eminent Pandit Nataraja Aiyer whose place he has occupied in the Salem College so worthily after him, and then as a brilliant lecturer who has earned a great reputation for his clear and masterly exposition of the Tamil works both medaeval and academical. He is endowed with a rich voice musical and charming, and the audience is as it were, spell-bound when he begins to sing. His popularity is well known both among the students and the public.

He enjoys the Tamil Literature with an elysian joy and inspires a love for the same into those who come in contact with him. Of late he has begun to serve the Muse of Poetry and his deep erudition and in-born piety have inspired him to compose poems of devotional nature in praise of his tutelary God and Goddess of which "Ambikai Malai" is one. It is written in a very clear Tamil, simple and dignified at the same time. The

natural flow of the language, its rhythm and the religious fervour that breathes through the poems all indicate the future poet that will adorn our Tamil Land.

My hearty congratulations to him on the publication of his first instalment of Poems.

(Sd.) M. S Tirumalai Iyengar,
Tamil Pandit.

I am exceedingly glad to read the excellent Tamil Poem, an ode in ten stanzas addressed to the Great God Muruga enshrined as a paramount Deity of worship in the beautiful little temple of Samayasangili, a village near the sacred place of Bhavani. The author of this exquisite poem, Mr. R Thimmappa Aiyer is very well known to me both as a student of the Salem College, and now for many years as the Head Tamil Pandit of the same Institution. He has made a life study of Tamil Literature and his skill in composing verses in Tamil in a wonderful variety of metres is unique, while his voice and music are very enchanting and melodious. In this little poem, he has not spared to criticise modern materialistic tendencies and he has availed himself of his scholarly knowledge to instil into the minds of his readers a feeling of deep religious reverence to God Muruga, the prominent deity of his choice, and a sublime regard for the discharge of one's own duties or Dharma with piety, sincerity and truth. He is a fearless hater of cant in any form and is swayed entirely by a robust feeling of piety and religious regard for truth. He is no opportunist and the present work of his is an eloquent proof of his untainted character.

May his supreme ambition to serve the Tamil reading public in the inculcation of feelings of piety and religious fervour, be crowned with success and may the Almighty in His Unbounded Grace give the author of

this neat little poem long life and strength to continue his labours in the immortal field to which he has so ably applied himself.

(Sd.) K. Sundaravarathachari.

Retired Asstt, Salem College.

21

உ

முகவுரை.

ஸ்ரீ இலக்குமிசமுத்திரமென்னும் சமயசங்கிலித்தலம், கொங்குநாட்டில் தேவாரம்பெற்ற திருநணாவென்கிற பவானி க்ஷேத்திரத்திற்கு ஐந்துமைல்தூரத்தில் காவிரியோரத்திலுளது சிவாலயம், விஷ்ணுகோயில், சப்தமாதர்குன்றம், மாரியம்மை சினகரமாதியன இப்பதியில் நன்கமைந்துள்ளன. சிவாலயத்திலேயே ஸ்ரீவிநாயகமூர்த்திக்குத் தனிச்சந்நிதி யமைந்திருக்கின்றது. நாற்பதாண்டுகட்கு முன்னர் நாமக்கல்லுக் கேழுமைல் தூரத்திலுள்ள துத்திக்குளத்தில் ஜமீன்தாரராயிருந்தவரும் எமதுறவின் முறையாரும் இருபெருஞ்செல்வத் தொருபெருங் குரிசிலுமாகிய ஸ்ரீமான் வி. நஞ்சுண்டையரவர்கள் தமதூரிலிருந்த மிகவழகிய ஸ்ரீ விநாயகமூர்த்தி விக்கிரகத்தை யெமதூரார் வேண்டுகோட் கிணங்கித் தக்க பெரியோர்களைக்கொண்டு கொணர்வித்துப் பிரதிட்டை செய்வித்தார்கள். அப்பிரானது பூசனைச்செலவுகட்காக நான்குபொதி நெல்லையளித்து வந்தார்கள் இற்றைக்கும் அவர் தம் சுவீகாரமைந்தனூர் திரு. சங்கராம ஐயரவர்களால் அத்திருப்பணி நடைபெற்று வருகின்றது.

மதுரைத் தமிழ்ச்சங்கத்துத் தமிழ்ப் பரீட்சைகளாகிய பிரவேச பண்டிதபரீட்சை, பண்டிதபரீட்சை யாதியவற்றில் நிரலே தேர்ச்சிபெற்ற யாம் பலவாண்டுகளாகச் சேலநகர் முனிசிபல் கல்லூரியிற்றமிழ்ப்பண்டித வேலையிலமர்ந்து செய்யுட்களை யெமதாசிரியர் திருவருளால் இயற்றும் திறம்வாய்ந்திருந்தும் போதிய நற்காலம் நேர்ந்திலாமையின் கடவுள்மீது யாதொரு நூலுமியற்றாதிருந்தேம். இடையிடையே நிகழ்ந்த குடும்பக் கவலைகளும் சிற்சில கொடியார்களது சூழ்ச்சியால் விளைந்த மருத்திடு சம்பந்தமான கொடும்பிணிகளும் முற்குறித்த நூல்களைச்

செய்தற்குத்தடையாயிருந்தன. பின்னர், ஓராற்றான் இவை களை யெல்லாம் புறங்கண்டு, இவ்வாண்டு, சித்திரைத்திங்களில் ஸ்ரீவிநாயகர் மும்மணிக்கோவை, சிவபிரானிரட்டை மணிமாலை, திருமுருகன் பதிகம், அம்பிகைமாலை யென்ற நான்கு பிரபந்தங் களை யியற்றுவோமாயினோம்.

சங்கநூல்களையச்சிட்டுத் தமிழுலகை வளம்படுத்திய மகா மகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமி நாத ஐயரவர்கள் பார்வைக்கு ஸ்ரீ விநாயகர் மும்மணிக்கோவை, திருமுருகன் பதிகம் ஆகிய இரண்டு நூல்களையனுப்பி அபிப் பிராயங்கேட்டிருந்தோம். ஊன்றிப்படித்துப் பார்க்கப் பலவேலை களினிடையே தக்க அவகாசமின்மையால், 'நீங்களனுப்பிய நூல் களிரண்டையும் படித்துப்பார்த்தேன்; அவற்றால், அம்மூர்த்தி களிடத்து உமக்குள்ள நிறைந்த பக்தி புலனாகின்றது' என்றதாக அவர்கள் எழுதியனுப்பினார்கள். அவர்களனுப்பியதைப் பொன்னே போற்கொண்டு பின்னர், உரையாசிரியச் சக்கரவர்த்தி யும், சங்கநூலாயினுஞ் சமயநூலாயினும் வேறெத்தகைய பழைய உரையில்லா நூலாயினும் தமது முன்னைப் பிறவியின் நல்வினை நலத்தாலவற்றிற்கெல்லாம் பொருணன்கு விளங்க வியற்றும் பேராற்றல் மிக்கவரும் எமதுழுவலன்புடைய உத்தம நண்பரு மாகிய தென்மொழி வடமொழிக்கடல் பிரஹ்மஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரவர்கட் கவற்றையனுப்பித் தமது கொள்கையைத் தெரிவிக்கும்படி கேட்டிருந்தோம். எமது முன்னைப் பிறவியின் பாக்கிய விசேடத்தால் அப் பெரியாரிட மிருந்து சிறந்ததோர் சிறப்புப்பாயிரம் அனுக்கிரகமாகக் கிடைக் கப்பெற்றமைக்கு அவர்பால் எழுமையும் நன்றி பாராட்டக்கடப் பாடுடையேம். மற்றும் பல நண்பர்களது சாற்று கவிகளும் இதிற் சேர்க்கப்பட்டுள. அவர்கட்கும் எமது நிறைந்த நன்றி யைச் செலுத்துகின்றேம்.

சேலநகரிற் குகையெனும் பதியில் வசித்துவருபவரும் கடவுட்பக்தி, அடியார்பக்தி நிரம்பப்பெற்றவரும் வர்த்தகப்

பெருஞ்செல்வவந்தரும் பரோபகார சீலரும், சிறந்த தருமப்பிரபுவுமாகிய திரு. எம். எஸ். தொட்டண்ண செட்டியாரவர்களது தவப்புதல்வரும், தேவாங்க குலத்திற்கோர் திலகம்போல்பவரும் எம்மிடத்துச் செந்தமிழ் நூல்கள் பயின்று வருபவரும், சீரிய மதிநுட்பமமையப்பெற்றவரும் 'கொடையுந்தயையும் பிறவிக்குணம்' என்றதற்கேற்ற இலக்கியமாயிருப்பவரும் யாம் கேளாதிருக்கையிலேயே எமக்குப் பற்பல உதவிகளைப் புரிந்த உத்தமப் பெருங் கொடையாளருமாகிய திரு. T. அண்ணாமலைச் செட்டியாரவர்கள் இத் தோத்திரப் பிரபந்தங்களைத்தாமே வலியவந்து அச்சிடுதற்கு மிக்க உதவி புரிந்ததுடன், பிரபந்தங்களை நிரலே யாம் சொல்லக்கேட்டுப் பெரிது மகிழ்ந்து அச்சிடுங்கால் பரிசோதனை புரிதலாதிய உதவிகளையும் மிக்கசிரத்தையுடன் புரிந்து வந்தார்கள். இப்பிரபு அவர்களது உதவியையுங் கருணையையுங் குறித்துப் பாராட்டி வாழ்த்துப்பாக்களை யியற்றி இந்நூலிற் சேர்த்திருப்பதுடன் இப்பிரபந்தங்களனைத்தையு மிவர்கட்கே உரிமையாக்கியுள்ளேம். சங்கநூற் பகுதிகளைச் செவ்விய செந்தமிழ் உரை நடையிலெழுதி வெளியிடுதல் வேண்டுமென்று அடுத்தடுத்து எம்மைத் தூண்டிவரும் இவரது தமிழபிமானம் மிகப்பாராட்டற்பாலது.

தமதரிய பலவேலைகட்கிடையே முழுதும் படித்துப் பார்த்தபின் ஆங்கிலத்தில் ஸ்ரீ விநாயகர் மும்மணிக்கோவை, அம்பிகைமாலை யாதிய பிரபந்தங்கட்குத் தமதரிய அபிப்பிராயங்களை மிக்க அன்புடன் கொடுத்தருளிய பெரியார்களாகிய செவ்வாய்ப்பேட்டை வழக்கறிஞர் திலகமும், சேலம் தாலூகா போர்டு உப அக்கிராசனாதிபதியும், சேலம் நகரபரிபாலன சங்க அங்கத்தினரும், சென்னை செனேட் கழகத்து உறுப்பினரும், தமிழார்வ நிறைந்தவரும், ஆகிய ஸ்ரீமத் ஐயாசாமிச் செட்டியார் (M. A., B. L.) அவர்கட்கும், ஆங்கிலத்திலும் தமிழிலும் நிறைந்த புலமையுடையவரும் எமதரிய நண்பருமாகிய லண்டன் மிஷன் உயர்தரக் கழகத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் திருமலை ஐயங்கார் அவர்கட்கும் யாம் மிகவும் நன்றி பாராட்டுங் கடப்

பாடுடையேம். அங்ஙனமே, சிவபிரானிரட்டைமணி மாலைக்கும், திருமுருகன் பதிகத்திற்கும் நிரலே தத்தமபிப்பிராயங்களை யாங்கிலத்திற் பொறித்துதவிய சேலநகர் முனிசிபல் கல்லூரித் தலைவரும் தமிழ்வித்வானுமாகிய திரு. **M. A.** இராமசாமிக் கவுண்டர் (M. A., L. T.) அவர்கட்கும், ஷை கல்லூரி உதவி யாசிரியரும், எமது கணிதநூலாசிரியருமாகிய ஸ்ரீமான் கே. சுந்தரவரதாச்சாரியார் (B. A.) அவர்கட்கும் யாம் நிரம்பக்கடப் பாடுடையேம்.

இந்நூல்களை யியற்றும்படி பலகாலு மெம்மைத் தூண்டி யெம்மாட்டு மிக்க அன்புகொண்டொழுகுபவர்களும், முருகன் றுதிவிடயமான பாக்களை யடுத்தடுத்துச் சொல்லும்படிவேண்டி யங்ஙனமே யாம் சொல்லுந்தோறும் பத்தியாலுள்ள நெகிழ்ந் துருகிப் பேரானந்தம் பூண்டு வருபவர்களுமாகிய எமதுகல்லூரி மாணவர தன்பின் றிறம் எம்மாலென்றும் நினைவு கூரற்பாலனவாம்

இந்தத் தோத்திரப் பிரபந்தங்களை மிக்க சிரத்தையுடன் தமதச்சுக்கூடத்தில் அச்சிட்டுதவிய மாணிக்கவிலாச அச்சுக்கூடத் தலைவர் ஸ்ரீமான் மாணிக்கம் பிள்ளையவர்களது அன்புடைமை மிகப் பாராட்டற்பாலது.

எமது தமிழபிவிருத்தி விடயமாக ஊக்கமளித்து வரும் சேலநகர் நகரபரிபாலன சங்கத்தின் அங்கத்தினர் திறத்து யாம் என்று மறவாநன்றி பாராட்டுகின்றனம்.

குற்றங்களைந்து குறைபெய்து பாராட்டல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

இங்ஙனம்,

Pandit. R. THIMMAPPA AIYER,
Lecturer in Tamil, Salem College.

உ

இலக்குமி சமுத்திரமென்னும் சமயசங்கிலி விநாயகர் மும்மணிக்கோவை தோத்திரப்பாக்கள்.

விநாயகர்

வஞ்சித்துறை.

கரடக் களிற்றின்
பரசு பதங்கள்
கரவு கழிக்கச்
சிரசு செறிப்பாம். 1.

சாம்பசதாசிவ மூர்த்தி

கலி விருத்தம்.

சமய சங்கிலித் தமனியக் கோயிலுற்
றிமயப் பாவைதன் னேடுவந் தெழுந்தருள்
சமயத் தலைவனெஞ் சாம்ப சதாசிவன்
நமமி ரித்திடுந் தாளிணை யுன்னுவாம். 2.

சருவலோக நாயகி

வஞ்சி விருத்தம்.

திருவி கார நியமமார்
சருவ லோகச் சாம்பவி
கருவி ரிக்குங் கழலிணை
யொருமை யோடு முள்குவாம். 3.

முருக மூர்த்தி
கலித்துறை.

வந்த தானவர் வருபடைத் தானையை வாட்டி
யெந்த மேம்படு மிரும்பொரு ளாந்தனக் கிணையாய்
முந்த வின்றியே முழுமுதற் றலைவனாய் மூத்த
கந்த நாதனைக் கருதியே கருவினை கழிப்பாம். 4.

(தன்னை இளமைமுதல் ஆதரித்த அம்மான் றுதி)
கலித்துறை.

அன்னை போலெனை யாதரித் தன்புட னளித்த
என்னை யன்நிகர் இராமனன் னாவற்கீ ழெழுந்து
முன்னை மோகனூர் மூலமாங் கறுப்பனென் முதல்வன்
பொன்னை நேரடி புகல்கொளும் மாமன்றாள் போற்றி. 5.

தமிழாசிரியர் துதி
நிலைமண்டில வாசிரியப்பா.

சீர்பரஞ் சுடராய்த் திகழ்சிவ மளித்த
தெய்வச் செந்தமிழ்த் தேனையென் னுள்ளம்
நிறைதரப் புகட்டிய நிமல சிகாமணி
குணமெலாந் திரண்டொரு வடிவுகொள் குன்றம்
வளமுறு பைந்தமிழ் வரம்புகண் டுணர்ந்தோ
னென்றுமென் னெஞ்சிருந் தகலா வேந்தல்
நடரா சனெனும் நயமா ரந்தணன்
கழலிணை நாளுங் கருத்திருத் துவனே. 6.

நூல்.
காப்பு.
வெண்பா.

பூவுலகம் போற்றும் புரிசமய சங்கிலியிற்
றேவுயர்க சானனத்தான் சீரோங்க—நாவுவந்தோர்

மும்மணிக்கோ வைபாட முன்னிற்கும் மும்மதத்தக்
கம்பக் களிற்றான் கழல்.

நேரிசை யாசிரியப்பா.

திருவமர்ந் திலங்குஞ் செழுந்தலம் பலவுட்
டலைமைய தாயொளிர் சமயசங் கிலியெனும்
வளம்பதி தழைத்திட வந்த விநாயக!
எம்மனோர் மனத்துள் விம்மிதம் பெருகப்
பத்திப் பெருஞ்சுவை பயந்தருள் பரம!
நினைமனத் துன்னுவோ ரின்னல் நீக்கியும்
உன்னு தோர்தமக் குறுக ணீந்தும்
போதர லாலோர் பொருவிலா விக்கி
னேசுர னென்னு மொழிநனு நாமந்
தாங்கியே யருளுந் தனிப்பெருந் தலைவா!
என்று மன்பொ டிறைஞ்சுமெற்
கருங்கழ றந்தினி தளித்தருள் வாயே. 1.

வெண்பா.

வாயவனை யேவாழ்த்தும் வார்சமய சங்கிலிவி
நாயகனை யேகரங்க ளாடுமால்—தூயவவன்
கோலமதை யேயுன்னு நெஞ்சங் குழைந்துருகிக்
காலருவி கான்றிடுமே கண். 2.

கட்டளைக்கலித்துறை.

கண்ணார் செழுஞ்ச மயசங் கிலிவாழ் கணத்தலைவா!
எண்ணே யெழுத்தே யெனவிவை யெண்ணி யியம்பியிட
நண்ணுந் தொழும்பர்க ளடியுன் னைமுன் நயப்பரென்றற்
றிண்கலைத் தெய்வநீ யென்பது தானே தெரியுமன்றே. 3.

நேரிசை யாசிரியப்பா.

தெரிதாற் கரிய வரிதுணர் பொருள்சேர்
பாரகா வியமாம் பாரதந் தன்னை

வரைந்தருள் புரிகென் றுருகி வணங்கி
வேண்டிய வியாதற் கீண்டருள் புரிந்து
பொற்புயர் மேரு வெற்பே டாகக்
கோட்டினு ளொன்று தீட்டுகோ லாகக்
கொண்டுதன் னியற்கைக் குணவறி வாலே
முழுவது மெழுதிய பழுதறு முதல்வ!
திருநா ரையூர்த் தெய்வ சிகாமணி
யெம்மனோ ருட்கருத் துணர்ந்தரு ளிபமுக
னென்றுனை நாளு மேத்தி யிறைஞ்சி
யாட்படு நம்பி யாண்டார் நம்பி
யைங்கர! நின்னை யன்புட னோக்கித்
தொல்பெருந் தொண்டர் தூய சரித
முற்று முணர்தல் பற்று மையினெற்
குபதே சித்தருள் விபுதர் கோவே!
யென்றுவேண் டுதலுந் துன்றிருங் கருணை
சுரந்தனைத் தும்புகன் றருளிய சுகுண!
கொண்டலை யண்டிய தண்டலை சூழுஞ்
சமய சங்கிலித் தலவிநா யக!விவ்
வரலா றிரண்டன் வழக்கடை வாலே
ஆதித் தொன்மைய வாரிய மொழியுந்
தேனினு மினித்துயர் தென்மொழி யதுவு
மோர மின்றியே யுணர்தற் பால
வென்றநற் பான்மை யிலங்கிடு மன்றே?
யாகவுஞ் சிலரிஃ தறிந்துண ராமே
மொழியிவ் விரண்டின் முழுவேற் றுமைகொள
லறிவின் குறையே யாவ தன்றிமற்
றென்னை? யெம் பெரும! விவ் வேதம தகன்று
நடுநிலை யறிவுட னாளும்
விளங்கிட வருள்வாய் விமலதே சிகனே. 4.

வெண்பா.

தேசிகன்கொ ளீசன் றன் செல்வமே! யென்றுன்னைப்
பூசிப்போர் மாசகற்றும் புண்ணியா!—பாசிலைய
தண்டலைகள் சார்சமய சங்கிலிவி நாயகனே!
நண்ணுமெனைக் காவாய் நயந்து. 5.

கட்டளைக்கலித்துறை.

நயமொழி யாடி நலமாங் கனிபெறு நாத! வுனைப்
பயந்தருள் முக்கணன் னையத் திரிபுரம் பட்டழிய
முயன் றனை நெஞ்சின் முன் னுதா லன்றோ முறிவுற்றனன்
வியத்தகுஞ் சீர்ச்ச மயசங் கிலிய! விம் மேற்றொழிலே. 6.

நேரிசையாசிரியப்பா.

மேற்றொழி லுற்றுநல் லேற்றம் பெற்ற
மூர்த்திமூ வர்க்கு முன்னதா யமைத்துனைத்
தோத்திரம் பாடி யேத்துவ தாலுஞ்
செயத்தகு மங்கலத் திருவினை தம்முளு
மேனைய தொழிலினு மிம்மி யும்வழா
தொருதிரு வுருவமைத் துயர்பூ சனைக
ணெகிழ்ந்துனக் கெவரும் நிகழ்த்த லானுந்
தரணியோர் புகழுஞ் சமய சங்கிலித்
தலத்தமர் செல்வ! சான்றாய் நீயே
தனிப்பெருஞ் சோதி யருட்பெருந் தலைமைத்
தானம் வகித்தனை தன்னிக ரில்லாப்
பால கணேச! பன்முறை யிதனை
நினைந்து நினைந்து நெஞ்சுரு கிக்கண்
வெள்ளம் பாயத் தெள்ளன் புக்கட
லாழ்ந்து நின்சர ணார விந்தம்
புகல்புக் கேனைப் புங்கவ!
காத்தருள் புரியாய் கருணைமீக் கூர்ந்தே. 7.

வெண்பா.

கருமாயை யோர்ந்தென் கவலையற நீக்கி
யருளுமுதற் றேவே! யரிய—மருந்தே!
திருவடிதந் தாள்சமய சங்கிலியாய்! சேர
வுருகுமடி யேனை யுவந்து. 8.

கட்டளைக்கலித்துறை.

உவந்து மணங்கொள ஒன்றிய வள்ளியை யுன்னிளையோன்
நவவடி வந்திகழ் நல்லதோர் வேழமாய் ஞாலமதில்
தவர்புக ழும்படி யுற்றநின் கோலத்தைத் தான்மறவேன்
சிவன்சுத னே! ச மயசங் கிலியென் றெளியமுதே. 9.

நேரிசையாசிரியப்பா.

தெள்ளமு தேயெனத் தித்திக் குஞ்சுவை
யின்றமி ழதனிற் றுன்றிய மாச்சிவ
ஞான போத வானுயர் நூலை
விளங்கு பெருந்திரு வெண்ணெய் நல்லூர்
தனிலவ தரித்த தனித்தவத் தலைவன்
பாசமுற் றிரித்த மாசறு செம்மல்
பொய்யழுக் கற்ற மெய்கண் டான்மிளிர்
குருப்ரஞ் சோதி முனிவரென் குரவர்பான்
மெய்யுப தேச முற்றதன் மேன்மைக்
கேற்பப் பெயர்த்துச் சூத்திர மீரா
றாக வகுத்தோ ரரும்பொழிப் புரைத்துத்
தண்டமிழ் புரிந்த தவப்பய னதனாற்
றந்தவத் தத்துவ சைவ சாத்திரத்
துட்பொரு ளவர்க்கு மூன்றி யிலங்கச்
சூர்ணிக் கொத்தெனுந் தூய வுரைநடை
யாலோர் சூக்கும வருங்குறிப் புரையைச்

சுரந்தருள் புரிந்த சுந்தர சீலா!
சிமயக் குன்றச் சமய சங்கிலி
திகழ்ந்திட வந்த திவ்ய விநாயக!
வித்தக! நின்பெரு தத்துவ ஞான

ஆற்றலை யாமே? யளவிட வல்லேம்
அல்லே மாகலி னடிய ரேமு
மொருசிறி துணர்ந்திட் டுய்யக்
கருணை புரியாய் கரிமுத லோயே. 10.

வெண்பா.

கரிமுகத்துத் தூயோனே! காரினங்கள் சூழ்சி
கரிமுகத்துத் தேனிழியுங் காக்க—வொருமுகஞ்சேர்
நற்சமய சங்கிலிவி நாயக! காப் பாய்சைவ
நற்சமய மோங்க நயந்து. 11.

கட்டளைக்கலித்துறை.

நயந்து புரிந்தன்பு நாடு மறிஞர்தம் ஞானவினை
வியந்து மகிழ்ந்தருண் மேலவ! வெங்கள் விநாயகனே!
பயந்து பயந்துழல் பாழ்பவ நோய்தனைப் பாற்றரனார்
பயந்துத வுஞ்ச மயசங் கிலியெம் பராபரனே. 12.

நேரிசையாசிரியப்பா.

பரசிவன் றன்றிருப் பணியாற் றக்கும்
றசுரார்க் கிறையவ னஞ்சூர் தன்னுற்
சிறையுறற் கஞ்சிக் குயிலுருச் செறிந்து
விண்ணிட மிரிந்துபின் றண்கா ழிப்பதி
துணையுடன் போந்து தாய்நந் தனமமைஇ

யதுபுன வின்றி வாடுத லறிந்துயர்
கண்ணுத லோன்றன் கழலிணை யிறைஞ்சப்

பரம னகத்தியற் காணூஉப் பைந்தமிழ்
முனிவ! விக் கரக முற்கொடு போந்து
புகலியின் மகவான் பூம்பொழின் மணம்பெற
வமைத்தி யாலென வங்ஙன மேயிசைந்
துடன்கொடு போதத் தந்தையி னோர்பெரும்
பூசனை விழவினைப் புகழுற வமைத்தல்
மைந்தர்தங் கடனே யெனத்தகு மாண்பினை
யுலகினர் தமக்கறி வுறுத்துவான் போலக்
கொடியுருத் தாங்கிக் குப்புறக் கவிழ்த்தத
னன்னீர் நன்னர்பைந் நாகம் பொருவ
நெளிந்தகன் றோடி நீள்வன மதனால்
வளம்பெறு மாறே வகுத்த மனோகர!
'அன்புசா ரெறும்பர்க் காற்றவு மெளியேன்'
என்பதிச் செயலா வியாவரு முணர
நன்கு தெருட்டினை நாத கணேச!
தமனியச் சிகரச் சமய சங்கிலிச்
சினகரத் தமர்ந்த செல்வ விநாயக!
இனைய நின் பான்மை யாவு
மறிந்துணர்த் துவனென லாவதோ? வன்றே. 13.

வெண்பா.

அன்றேயாட் கொண்டனையா லாலமர்சி வன்பாலா!
இன்றேதும் வன்பிழைக ளிவ்வேழை—யொன் றறியேன்
தாரகபா தஞ்சமய சங்கிலியாய்! தந்திடது
மாரகத்தை மாற்று மருந்து. 14.

கட்டளைக்கலித்துறை.

மருந்தே! மணிமுத்த மே! யென் மகிமை மாரகதமே!
திருந்தே றறிவினர் தேர்ந்து தெளிந்தவொர் சித்துருவே!

விருந்தே விளைச மயசங் கிலியெம் விநாயகனே!
இருந்தே நினைத்தொழு தேத்திடு மென்றனை யேன்று
கொள்ளே. 15.

நேரிசையாசிரியப்பா.

என்றுமுப் போழ்து மான்ற வணக்கந்
தவரு தியற்று மிவருத் தகைய
பேரன் புளத்தின ரார வுவந்துன்
சந்திர கிரண முந்தெழின் மகுடமு
மிரித்திரு டிமிக்குந் திரிநய னம்பொழி
யருண்மழைப் பெருக்கு மிருமருப் புடன்றிகழ்
குஞ்சர வதனத் தெஞ்சலில் வனப்பும்
அன்பர்தந் துதிகொளும் இன்பணைச் செவியுந்
தார்ப்புய நான்க ணூர்ப்பொலிக் கவினும்
ஒப்புரைப் பரிய முப்புரி நூலு
மடலமைந் துயரிய தடமார் பழகுஞ்
சரிந்து நான்றிடு சால்வயிற் றெழிலுந்
தூய வெண்ணிற மேயபொற் றாசு
மெற்றளைப் பவர்க ளெப்புவ னத்து
மிலையாற் பிணிப்பவ ரெவரையு மியானே
யென்றுகாட் டுதல்போ லொன்றிய பாசமொன்
றேந்திய கரமு மெஞ்சிய நான்குடன்
கணகண ஒலித்திடுங் காற்சிலம் பழகுங்
கண்பெற் றதற்கோ ரெண்குறி யாகக்
காணப் பெற்றன மாணவ முதலாப்
பொல்லாக் குணங்க ணில்லா தோட
விருவினைத் தொடர்பினி யொருவுதல் காண்டு
மெனமனத் துணிவுகொண் டெம்பெரு மான்! உனை
யன்றியெப் பொருளையு மடைதல்கொள் ளாமே
நிறைநெஞ் சினராய் நிற்கவிப் புன்மையேன்

கல்லினுங் கடிய வன்மனம் பயின்று
நினைநினை யாது நீள வுழன்றேன்
றருக்குல மலியுஞ் சமயசங் கிலிக்க
ணருவினை யிரித்திட வாலய மமர்ந்தரு
ளாகு வாகன! வதனா லெளியேன்
புன்மை போக்கிப் புண்ணிய!
இன்னருள் புரியாய் எழிற்பதந் தந்தே. 16.

வெண்பா.

பதமளித்தே பாலிப்பாய் பண்ப!வுன் நாமம்
நிதமாக நெஞ்ச நினையு—மிதனைச்
சகத்தோர் புகழ்சமய சங்கிலியாய் நின்னெஞ்
சகத்தோர்கித் திக்கணே ச. 17.

கட்டளைக்கலித்துறை. [யமகம்]

கணேச னெனநினை யேத்துவ தோடுங் கருதுநர்தங்
கணேச வெனவுங் கழறுவ னன்றியுங் கன்மனத்தேன்
கணேச மனைவெனுங் காலவென் பேனெனைக் காத்திடுங்காற்
கணேச மயசங் கிலியவைத் தோம்பாய் கருணையனே. 18.

நேரிசையாசிரியப்பா.

கருப்பூபிற வாதரு ளொருபெருங் குரிசில்! நின்
அருளெளமைச் சூழ்ந்தக லாம லளித்தே
வந்து மெந்தம் முந்தை வினையோ?
அன்றி மாயமோ? யாமறி யாமே
கொலையே களவே குத்திர மிவைபயில்
வன்மனப் பேய்நிகர் வஞ்சனா தியரு
மூட்பகை பெரிதுறு முறவினர் சிலருங்
கொல்வான் வேண்டிக் குழுமியே தம்மு
ளாய்ந்து மெல்ல அறிவினை மயக்கிக்
கைகாற் சோர்வு கவலை யச்சம்

உறக்க மின்மை யுண்டிசெல் லாமை
பித்தமே விடல்போற் சித்தம் பேதுற
லென்றிவை விளைத்துப் பொன்று விக்கும்
மருத்தீட் டினையெம் வயிற்ற கத்தே
யுறுமா றுண்டியி னுற்றதோர் நெறியா
லமைத்திட நொந்துயிர் போமா றாகிப்
பின்ன ருன்றன் பேரரு ளாலே
திண்டுக் கல்லுக் கப்பா ற்றிகழும்
நத்தங் கோவிற் பட்டியை நணுகி
யாங்கு வைகு மரிய முத்துப்
பண்டா ரத்தைப் பண்டுசெய் தவத்தாற்
கண்ணுற் றெமது புண்ணுறு நோயைத்
தெரிக்கவே யவனுந் திருந்துமோர் குழலை
யிதழ்களி னிடையே யிருத்தி யூதி
யொருகா லல்ல விருமுறை முக்காற்
சென்றகா லையெலாஞ் சேர வெடுத்து
மருத்தீ டனைத்து முருக்குலை யாமே
காட்டயாங் கண்டிவன் காலனை வென்ற
மூல மூர்த்தி வேலை யேந்தி
யென்றிக் கடவுள ரிரும்பெருங் கருணையை
முன்னைய தவத்தால் முற்றும் பெற்றவ
னாதல் வேண்டுமென் றெண்ணி யத்த
மியன்றவை யீந்தவ னேற்றுளங் களிக்கப்
பின்ன ரெம்பதி போந்தனம் பெரும!
வேழ முகத்து மேலவ! சமய
சங்கி விப்பதி தழைக்க வெழுந்தருள்
தூய மங்கள சுகுண சொரூபா!
இபமுக வசுரனை யிரிந்தோ டப்புரி
வல்லப மிக்கநல் வல்லபை கேள்வ!
நின்செய லன்றியிந் நிகழ்ச்சி
பிறர்செய்வ தெங்ஙன்? பெருமிதத் தோயே.. 19.

வெண்பா.

பெருந்தகையோய்! நின்வடிவப் பேராற்றற் பேச
வருந்தவத்தர் தம்மாலு மாமோ?—பொருந்தித்
தவலருநின் சீர்சமய சங்கிலியாய்! தாவிக்
குவலயமெல் லாம்விளங் கும். 20.

கட்டளைக்கலித்துறை. [யமகம்]

விளங்கும ரன்றந்த வீரப் படையார் விமலகுண!
விளங்கும ரன்னுடன் வேண்டிய வாடலை வேட்டயர்வோய்!
விளங்கும ரன்பர் விரும்பிய வாறீ மிகுவரங்கூ
விளங்கும ரன்ச மயசங் கிலிய! விநாயகனே. 21.

நேரிசையாசிரியப்பா.

அகன்பொருள் வேத விரிநூ லாகம
மென்றிவை யிரண்டே யேற்ற மேற்கோ
ளெடுத்துக் காட்டற் கடுத்த நூல்கள்
வேறே யிவற்றின் விரிந்த பனுவல்க
ளென்றரு ணந்தி யிருந்தவச் சான்றோர்
நவின்றன ராகலி னேனைய நன்னூ
லேற்ற பெற்றி யாற்றப் பயின்றவை
முன்னதன் சாரமென் றுணர்ந்து முன்னர்
'ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படு'மென் றுரைத்துள
தேவர் வாசகஞ் சிரசா வகித்து
நன்னீ ராடி நலநீ றணிந்து
விதிப்படி நித்திய வினைகளை முடித்தர
வைய னருளிய வைந்தெழுத் தோதி
யப்பமெள் ளுண்டை மோதக மவல்தேங்
குழல்பொரி நிறைகனி குழக!மற் றுளவுஞ்
சேரக் கொண்டு சீரிய பூசனை

யான்றோர் நூலின் வழியே யாற்றி
யரகர வைங்கர! ஐயா! போற்றி
பிறவிவே ரறுக்கும் பெரியாய்! போற்றி
ஓமெனும் வடிவா ருத்தம போற்றி
கொஞ்சி நடம்புரி குஞ்சர! போற்றி
சபதப முகக்கு மிபமுக! போற்றி
கங்கை பெற்ற புங்கவ! போற்றி
அவமுத லகற்றுஞ் சிவமுதல்! போற்றி
துன்பினைப் போக்கு மின்பமா முதலே!
துட்டர்தம் வினையைக ட்டொடெரித்தவர்
சூழ்ந்து மிகப்புரி பில்லி சூனிய
மருந்தீ டின்னன வுருக்குலைந் தொழியக்
களைந்தவர் தம்மையுங் கண்டதுண்டமாச்
சவட்டி யடிக்குங் குவட்டினை யோன்றன்
முன்னவ! போற்றி முன்னு மெம்மனோர்
குடிமுழு துங்காத் தருள்புரி குகனே!
போற்றி போற்றி போற்றி தூயோய்
போற்றி போற்றி புண்ணியா! போற்றி
நின்னையே நம்பி நேய பூசனை
யாற்றுபே ரன்பரை யழிவிலா மோட்ச
நன்னிலை புறுவித் துவத்தி நன்ன
ரென்பது நாவலர் பெருந்தகை யேந்தலுஞ்
சேரமான் பெருமா ளானுநற் செம்மனு
மின்புட னடைவே வெண்களி றிரும்பரி
யென்றிவை யிவர்ந்திட் டெழிற்கதி களுல
முன்னவன் கைலையை யுன்னிச் சேறலை
யறிந்து கடுக நின்னை யகத்தே
முன்னிப் பூசனை முற்பட் டுஞற்றித்
தானுமத் தூய தவளப் பொருப்பினை
யுறுவா னுற்ற ஔவையை யூக்கித்
தமிழா ரணங்கே! தாமத நிகழிற்
செய்வ தென்னை? யென்றே சிறிதுங்

கவலல் வேண்டா கருத்தினை முடிக்குவல்
ஆற்றுக பூசனை பைய வமர்ந்தே
யென்றே கழறி யொன்றுதன் னாற்றலான்
மற்றவ் விருவரும் முற்போ தற்குமுன்
ஏற்றினை யிறைமுன் ஏற்ற கரத்தா
லென்ற சரிதையாற் பெறுது மென்னினின்
அளப்பருங் கருணையை யுளத்தி லுன்னி
விள்ளுவதி யாங்ஙனம்? தெள்ளிய தேசிக!
வென்றே துதிபல வின்புட னவின்று
நெஞ்சு நெகிழ்ந்துரு கும்பெரு நேயர்க்
கெளியோய்! சமய சங்கிலி யேக
மூல பராபர முதல்வ! திவ்விய
பரிமள களப பளித குங்கும
படீர மணிபுய பாரகெம் பீர
தீர மனோகர வீரா! நின்னை
யென்றும் வழிபடு மெற்குப்
பவவினை யகற்றாய் பாலநேத்திரனே. 22

வெண்பா.

பாலசந்தி ரக்கண நாதா! பவமிரிக்கும்
மூலசந்தித் தேவ!மா மூடிகத்தாய்—காலசந்திச்
சற்குணர்க்கா வாய்சமய சங்கிலியாய்! சாடுபகை
யெற்றுங்கோ டார்ந்தவனே! யின்று. 23

கட்டளைக்கலித்துறை.

இன்றெனக் குப்புரி நன்றியை யென்றுமி யான்மறவேன்
துன்றிய தொல்ச மயசங் கிலியுறை தூயகஜ!
என்றைநீ யொன்றிய வேல்வையி னின்னிடை யேர்மணியாய்
நன்று மிளிர்ந்ததை நாட்டிய வொன்றது நாயகனே. 24

நேரிசையாசிரியப்பா.

நாயக னெனத்திகழ் பாயர வணையோன்
அன்னவ னீன்ற அன்ன வூர்தி
யென்றிவர் தமக்குநல் லொன்றிய தொழிலை
யீந்த தன்றிமுற் போந்துன் றந்தை
யெப்புவ னத்துள் ளெல்லவர் தமக்கு
மொருதனித் தலைமைப் பெரியவ னீயே
யென்றற் கறிகுறி யாக வெழிலுறு
விநாயகப் பெயரை விருப்புட னீந்தனன்
அதனா லவனுந் தன்றொழி லணிபெற
நடாத்தக் கண்டு நலமார் பெருமிதந்
தோன்றநீ வீற்றி ருக்கை துளங்குதல்
காண்டு மாக லானுங் கடுங்குரற்
புரிந்துல கத்துப் பொருந்திய வினைத்தையு
நோக்கி யடங்கல் தூக்கினுமக்கே
யுறுகட னாக வுற்றுள மற்றென்
கரத்தினைக் காணிற் பொருத்தக் கருத்து
விளங்கிடு மன்றே யாயினும் விளம்புவ
லங்குசம் விலங்கினுள் வெங்கத முற்றே
வெறித்துத் திரிந்து பிறர்மதி யாம
லோடி வளைத்துப் பாடனைத் தும்புரி
கரடக் களிற்றை வருடி வகைந்துபி
னடங்கச் செய்யு மரியவா யுதமா
மென்பது தெரிதி ராயினு மென்செய
லற்புத மென்பதை யறிந்திலிர் போலும்
பரசிவ னளித்த வொருதனி வேழ
மென்னை யடக்குத லின்றி யடங்க
வியாவர்க் கும்முறை யென்றுகாட் டுதல்போற்
றரைதனி லான்ற சமய சங்கிலி
யிலங்கத் தோன்றிய நலமுறு நாயக!
உறுபவர் பவவினை யுறுக்குவி நாயக!

தோன்றுநின் றாய துலட்ட[illegible]
[illegible]
[illegible]றிந்துவிந் தன[illegible]பெரி தங்கசத் தோயே. 25

வெண்பா.

அங்குசத்தோய்! நின்சிரமொன் ருயிலங்கும் பின்வந்த
வங்கங்கை நின்ருேனுச் காறுதலே—தெங்கினங்கள்
ஆர்சமய சங்கிலியாய்! ஐந்தரனுக் கோரரக்கன்
சார்வுற் றிடுகந் தசம். 26

கட்டளைக்கலித்துறை. [யமகம்.]

கந்தச னைச்செற்ற காகுத்த னன்மரு கன்முருகன்
கந்தச னைக்குட்டி யோமென்ப தன்சீர் கழறியவன்
கந்தசன் மார்க்கன் கருதன்ப! நாயேன் கருத்திலுக்கு
கந்தசன் னைச்ச மயசங் கிலிகஜ! காத்தருளே. 27

நேரிசையாசிரியப்பா.

[தமிழுக்கும் காவிரிக்கும் சிலேடை.]

காத்தரு ளளிக்குங் கண்ணுத லோன்றன்
கருணை பெறற்கோ ரருந்துணை யாகுந்
தனித்தலே நிலைகொளு மினித்த செந்தமிழ்
அகத்தியற் சார்ந்திச் சகத்துற லானு
மைத்திணை யொழுக்க மமைவுற லானுந்
தெளித னெகிழ்ந்திட னவச்சுவை தெரித
றண்ணென் ருெழுக ருர்வள வரையுறல்
காவிய முற்றுப் பாவி யலேயீந்
தற்றற் ருெழுகி யாவங் கோட
லென்றிவை நலமுற வேற்றுற லானும்
பாரம!நி னருஞ்செயல் பாவுத லேக்கொண்
டோங்கித் தழைத்துப் பாங்குற லானும்
பொன்னைக் கொழித்துப் போதர லானும்
மாலை மாற்றங் கோலச் சுழிகுளஞ்

சக்கர வளைக ளென்றிவை சார்ந்தே
நிமிர்தர லானு மிமிழ்திரைப் பொன்னி
பொருவப் பெருநலம் புடவியி லுள்ளோர்க்
கீந்து திகழவு மிஃதறி யாமே
வாணா ளையெலாம் வீணாக் கழித்துப்
பொன்னே பொருளே புலையே கொலையே
குடியே கவறு கோள்பொய் வெஃகல்
விழுத்தமிழ்ப் பேணா தழுக்க றுத்த
லந்தணர்த் தபுத்த லருமக மிகழ்ந்திட
லென்றிவை சாலப் பயின்றே யிறைவன்
றன்னையும் புறக்கணித் தடங்காச் சர்ப்பனை
யியற்று பவரே யிவ்வுல கத்தில்
மிக்கன ராலைய! தொக்கபன் னிரயம்
புக்குழ லாமே வக்கிர துண்ட!
நஞ்சுண் டோன்சுத! நாத கணேச!
சமய சங்கிலித் தலைவி நாயக!
தடுத்திவர்ப் புரந்தறி விடித்துக் கொளீஇ
யுய்தலை யின்ன ருறுமா றருளப்
பரவின னின்றாள் பண்ப!
தும்பி முகத்துத் தொன்மதி யோயே. 28

வெண்பா.

தொன்மதியோய்! சீரியநற் றும்பி செறிதாராய்! நின்
மன்னியசீ ரோங்குகவே மாநிலத்தில்—பன்மலைசூழ்
நற்சமய சங்கிலிவி நாயகனே! நம்பியுனைக்
கற்குமெனைத் தப்பாமற் கா. 29

கட்டளைக்கலித்துறை. [யமகம்]

காவணஞ் சூழ்ச மயசங் கிலிய!வென் கற்பகமே!
காவண மாமலர்க் காழிவிண் வேந்தற் கருள்புரிந்தோய்!

காவணங் கென்றன் கவலை தணித்துன் கருணையடிக்
காவணமின்பக் கருத்தினை யீந்தே கஜமுகனே. 30
(நூற்குற்றம் பொறுக்குமாறு விநாயகரை வேண்டுதல்.)

கட்டளைக்கலித்துறை.

காவளஞ் சூழ்ச மயசங் கிலிவி கடகளிறே!
நாவள மார்தர நன்மும்ம ணிக்கோவை நானுனக்குப்
பூவள வன்ப! புனைந்தனன் மாசு பொறுத்தருளாய்
பாவளம் பாவுபல் பாவலர் பாப்புனை பண்பினனே.

நூற்பயன்

அறுசீரடியாசிரிய விருத்தம்.

எம்மணி களினு மெழின்மணிபோ
லிலங்குஞ் சமய சங்கிலியில்
நம்மணி யிருளை நையவைத்தே
ஞான நமக்கு நயந்தளிக்கும்
அம்மணிக் கொன்றை சடைக்கணிந்த
அரன்சேய் சித்தி விநாயகன்றன்
மும்மணிக் கோவை முழுநூலை
மொழிவோ ருறுவர் முத்தியையே.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இலக்குமி சமுத்திரமென்னும் சமயசங்கிலியில்
எழுந்தருளியுள்ள

ஸ்ரீ சாம்ப சதாசிவப் பெருமான்
இரட்டைமணி மாலை.

காப்பு.

ஸ்ரீ கணேசர்துதி.

[கட்டளைக் கலித்துறை.]

சிரிய னுஞ்ச மயசங் கிலியுறை செம்பவள
வேரியற் சாம்ப சதாசிவன் றாட்கோ ரிரட்டைமணித்
தாரிய னூறனைச் சாத்திடற் கென்னுளஞ் சார்ந்துநிற்குங்
காரியன் மும்மதக் கங்கைபெற் றோனற் கழலிணையே.

நூல்.

[வெண்பா.]

பொன்னார் வளமோங்கும் பூம்புனல்சே ரெந்தெய்வப்
பொன்னிநீர்த் தோடும் பொலிவினதாய்-துன்னியொளிர்
சற்சமய சங்கிலிவாழ் சாம்ப சதாசிவன்றன்
பொற்கமலத் தாளே புணை. 1.

[கட்டளைக்கலித்துறை.]

புணையாம் பிறவிப் பெருங்கடற் குத்துணை பூவிணைக்கொண்
டணைதந் தருச்சனை யாற்றுதொண் டர்க்கோரரும்படையாங்
கணையார் நமன்வெல வென்றே பகர்வர் கனலறிஞர்
பணையார் பெருஞ்ச மயசங் கிலியான் பதத்துணையே. 2.

வெண்பா.

பதத்துணை யேத்தி யிறைஞ்சிப் பணியும்
விதத்தொண்டர் நெஞ்சிடங்கொள் வேந்தே!-நிதமென்றே
நம்பினே னற்சமய சங்கிலிவாழ் நாயகனே!
தம்பிரான்! நீயே சரண். 3.

[கட்டளைக்கலித்துறை.]

சரணார் வளச்ச மயசங் கிலியுறை சாம்பசிவா!
பரணார் தினைப்புன வள்ளி பதம்பணி பாலகந்தன்
மரணந் தகந்தவி ரேரம்ப னென்றிந்த மைந்தரைப்போ
லரணாக வுற்ற வடியேனையுமேற் றருளையனே. 4.

[வெண்பா.]

ஐயனே! அப்பா! அருளாரும் வள்ளலே!
மையவே பாதம் பணிகுநரை—நையவிடா
முத்தியுல குய்த்திடுவாய் முற்சமய சங்கிலியாய்!
பத்தியிதற் கேதுவன்றோ பார். 5.

[கட்டளைக்கலித்துறை.]

பார்தவ ழும்பெருஞ் சீர்த்தி படைத்திடு பண்புடையாய்!
நார்தவ வுற்ற நலம்பெறுந் தொண்டர்செந் நாவினின்று
கார்தவழ் நீர்போற் கவிகளைப் பாடிய காளகண்டா!
ஆர்தவழ் சீர்ச்ச மயசங் கிலியாய்! அருளெனக்கே. 6.

வெண்பா.

எனக்கே பணித விருகாலு மென்று
முனக்கே யடியருள ளுற்ற—தெனதோர்
கிரியைகொளும் நற்சமய சங்கிலியாய்! கேளா
வுரியதரு ளாவகையென் னேர். 7.

கட்டளைக்கலித்துறை.

ஓர்ந்திடு தீவினை யாளரெ மக்கோ ருணர்வுசிதைத்
தார்ந்திடு மைய றருமருத் தீட்டினை யார்தரும்போ
தூர்ந்திட் டமைக்கப்பின் னேயாத்துய [illegible]
பேர்ந்திடல் சீர்ச்ச மயசங் கிலிய! நின் பேரருளே. 8.

வெண்பா.

பேரருளார் சம்பந்தப் பிள்ளையா ரும்வாத
வூரருமுன் னைத்துதித்தே வுய்ந்தனரா—லாரவுணர்
கிற்பிற் றிருச்சமய சங்கிலியாய்! கேண்மையுட
னெற்பவத்தைத் தீர்ப்பவனீ யே. 9.

கட்டளைக்கலித்துறை.

ஏவொன்றி னற்கலை மாளவெய் தோன்பணி யேகனுநீ
பாவொன்றி னற்கலை ஞன்பாண பத்திரற் பார்த்தருளி
நாவொன்று பாவைத் தருமிக் கருளிய ஞானனு நீ
காவொன்று சீர்ச்ச மயசங் கிலியா! காத்தருளே. 10.

வெண்பா.

காத்தரு ளென்ற கரிக்குருவிக் குக்கருணை
பூத்தருள்செய் புங்கவனே! புண்ணியா!—மாத்தருக்கள்
சார்சமய சங்கிலியாய்! சாம்ப சதாசிவனே!
பார்ப்பிணிக ளெற்ககற்றப் பா. 11.

[கட்டளைக்கலித்துறை.]

அப்பா! வெனநினை யன்றழைத் துய்ந்த வரசியுநல்
லப்பார் நறும்பந்த ரப்பூதி யுஞ்சத்தி யப்ப·நுடன்
தப்பா வளச்ச மயசங் கிலிசிவ! சண்டியுமென்
றெப்பா வலரு மிசையிவர் நின்னரு ளேற்றவரே. 12.

வெண்பா.

ஏற்றவரே யீவோர்க் கிரும்புண் ணியம்பயப்பா
ராற்றவு மென்ற வமுதமொழி—யேற்றவ! தண்
காற்சமய சங்கிலியாய்! காட்டினைநீ ஞாலத்தார்க்
கேற்கும் உருவமதை யேற்று. 13.

கட்டளைக்கலித்துறை.

ஏற்றுகந் தன்புட னென்பா வினையு மிசைந்துகொண்டாய்
சீற்றுப் பிறையைப் புனைச மயசங் கிலிமுதலே! [டோ
கூற்றுதைத் திட்டதை யுன்னினன் பர்க்கோர் குறையுமுண்
தேற்றுங் குணநிதி நீயல வோ? வினை தீர்ப்பவனே. 14.

வெண்பா.

தீர்ப்பவனே மும்மலங்க டைத்தவனே முப்புரங்க
ளீர்ப்பவனே வெவ்வினைக ளெவ்வெவர்க்கும்—நீர்ப்புவன
வேர்சமய சங்கிலியா னென்பரே யாதலினுற்
றோர்சமயத் தானையே சேர். 15.

கட்டளைக்கலித்துறை.

சேர்திருப் பேரூர் திருநின்றி யூர்திருச் சேறைதுறை
யூர் திரு வீழி மிழலை திருப்புக லூர்திருவாக்

கூர்திரு வாரூர் திருப்பா திரிப்புலி யூர்பழனஞ்
சார்ச மயசங் கிலியர ளுருந் தலத்தகமே. 16.

வெண்பா.

அகமே அகலா அறிவதே செய்யாத்
தகுமுயிரே நற்றிரியாச் சார்த்திப்—புகுஞான
வங்கியாற் சோதி யமைத்திடி னெஞ்சமய
சங்கிலியாற் சார்த றகும். 17.

கட்டளைக்கலித்துறை.

தகும்பிறைத் துண்டமுங் கங்கையு மாருஞ் சடைக்கவினும்
நகுமுறு வன்மிளிர் வாயழ குந்நய நன்னுதன்மேற்
புகுசன னந்தவிர் நீற்றணி யுங்கண் பொலிவனப்பும்
மிகுபத்தி யைச்ச மயசங் கிலியாய்! விளைத்திடுமே. 18.

வெண்பா.

விளைத்திடுமே கொல்லாமை வெஃகாமை நோன்பு
திளைவாய்மை யென்றிவைகள் சேர—முளையகத்தைக்
கீண்டறிவாக் குஞ்சமய சங்கிலியிற் கீர்த்தியனை
வேண்டித் தொழுவார்க்கு வீடு. 19.

கட்டளைக்கலித்துறை.

வீடருள் வேந்தனை மெய்யனை நின்மல வித்தகனைத்
தேடரு மாமணிச் செல்வனைத் தூய சிவக்கொழுந்தைப்
பாடருஞ் சீர்ச்ச மயசங் கிலியனைப் பண்ணவனை
நீடருள் வாய்த்திட நேர்ந்து தொழுதிடு நீ மனமே! 20.

நூற்பயன்,

அறுசீரடியாசிரிய விருத்தம்.

சலமிக் கோங்குங் காவிரிபாய்
சமய சங்கி லிப்பதியிற்
றலத்தர் போற்றும் பெருங்கருணைச்
சருவ லோக நாயகியோ
டலங்கா ரத்து டன்விளங்கும்
அரனெஞ் சாம்ப சதாசிவன்ற
னிலங்கு மிரட்டை மணிமாலை
யிசைப்பொ ருறுவர் மிகுநலமே.

உ

சிவசண்முகநாதன் றுணை.

சமயசங்கிலி திருமுருகன் பதிகம்.

காப்பு.

ஸ்ரீ விநாயகமூர்த்தி

இருவிகற்ப நேரிசை வெண்பா.

துங்கமிகு தண்கழனி சூழுமுயர் நற்சமய
சங்கிலிவா ழேரம்பன் றாளிணைக—ளெங்குமனத்
துன்னித் தளைப்ப னவன்பின்னோன் றாய்பதிக
மென்றுமுயர்ந் தோங்குகவே யென்று. 1.

ஸ்ரீ சாம்ப சதாசிவமூர்த்தி

கலிவிருத்தம்.

சமய சங்கிலித் தலமதில் வீற்றரு
ணிமல னற்புத னிராமயன் சைவமாஞ்
சமய நாயகன் சாம்ப சதாசிவன்
கமலத் தாளிணை கருத்து ளிருத்துவாம். 2.

ஸ்ரீ சர்வலோக நாயகி

வஞ்சி விருத்தம்.

துர்ம லத்தின் றொல்லையாற்
கர்ம சன்மங் கான்றிடச்
சர்வ லோகத் தலைவிதன்
நிர்ம லத்தா ணிணைகுவாம். 3.

ஆசிரிய வணக்கம்.
நேரிசையாசிரியப்பா.

செந்தமிழ் புகட்டிய சீர்நட ராசன்
அந்தண் கழல்க ளன்போ
டென் றலை சூடுவ னெழினலம் பெறற்கே. 4.

நூல்
பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தலக்கணுயர் மொழிகளிற்றமிழ்தலைமை பூணல்போற்
றலங்க ளிற்கற்பகந்
தலைமையுற நிற்றல்போற் றடினியெல் லாநிற்க
சானவி தானெங்கல்போற்
குலக்கிரி யெனத்தகு மேருவெற் பொன் றுமே
குவட்டினிற் றலையுறல்போற்
குவலய மதிக்கவரு மலர்களிற் கோகனகங்
குறைவுறு துயர்ந்திடல்போல்
வலக்கணுப் பரிதியு மிடக்கணு விந்துவும்
வயநுதற் கண்ணங்கியும்
மகிழ்ந்தணிசெய் மாதேவன் மைந்தனீ மகிமையுடன்
வானவருட் டலைமையுற்றாய்
சலக்கரிய தாரகனை வென்றிகொண் டண்டர்பயஞ்
சவட்டியே யருளுமுதல்வா!
சார்வுற்ற சூர்முற்ற வோர்கொற்ற வேற்செற்ற
சமயசங் கிலிமுருகனே. 1.

மின்னலைநி கர்த்தநவ ரத்தினச் சுடர்வீசி
விளங்குபொற் கிரணமுடியும்
மேன்மைதிகழ் பிறைத்துண்ட மாறுநின் றலனைய
வெண்புண் டரங்கொணுதலும்
பன்னரிய நளினநிரை மானும்விழி யீரா றும்
பௌவமொளிர் பகலவன்போற்

பாசவிரு ரெக்குமுன் னறுமுக பத்மமும்
பகர்புயம் பன்னிரண்டும்
நன்னயச் செவிகளுங் கரங்களீ ராறும்வாய்
நாசியொடு நகுமார்பமும்
நலம்புரியுங் கண்டியொடு நாலுநா லுங்கச்சை ஞாணழகும்
நாதவடியுஞ்
சன்னவீ ரத்தழகு மிவையாவு மென்னுளஞ்
சலியா திலங்கவருளாய்
சார்வுற்ற சூர்முற்ற வோர்கொற்ற வேற்செற்ற
சமயசங் கிலிமுருகனே. 2.

திருப்பரங் குன்றந் திருச்செந்தி றென்பழனி
சிரகிரி திருவேரகந்
திருக்குன் று தோருடல் பழமுதிர் சோலைதென்
சேரிகிரி திருவான்மியூர்
திருப்பனந் தாடிருப் போரூர் திருத்தணிகை
திருவட முல்லைவாயில்
திருக்கழுக் குன்றந்தனிச்சயந் திருவருணை
திருப்பெருந் துறைபசுமலை
திருப்பூவ ணந்திருச் செங்கோடு கதிர்காமந்
திருமயிலை திருக்கற்குடி
திருவிரா மேச்சரந் திருச்சிராப் பள்ளிகிரி
சீகாழி திருவிலஞ்சி
சருப்பசய னன்மருக! இவையாவும் பெரும!நீ
சார்ந்திடுந் தலங்களன்றோ?
சார்வுற்ற சூர்முற்ற வோர்கொற்ற வேற்செற்ற
சமயசங் கிலிமுருகனே. 3.

துங்கமிகு சந்தனம் பொங்கிவந் தலைவீசத்
தூயமண முய்த்தலானுஞ்
சூழுநற் கொன்றைகூ விளமத்தங் கரந்தையைச்
சுழித்தக மடுத்தலானும்

பொங்கவெண் ணுரையெங்கு மோங்கியே கிளர்ந்துமேற்
புனிதமாய்த் துளங்கலானும்
புகுபவர் மாசறுத் தவருள்ளம் புறவுடற்
புரிவுறப் புரிதலானும்
புங்கவன் பன்மலர்த் தாரினொடு புண்ணியப்
பொலிநீறு சந்தமணியும்
பொன்றிகழ் கோலமது காட்டியே மிளிருமெம்
பொன்னிநதி பாய்ந்தோடலாற்
றங்குபுக ழெஞ்சமய சங்கிலியின் மகிமைதனைச்
சாற்றிட வுங்கூடுமோ?
சார்வுற்ற சூர்முற்ற வோர்கொற்ற வேற்செற்ற
சமயசங் கிலிமுருகனே. 4.

உற்றசம யங்கடோ றகலாம லுள்ளுவந்
தோங்கிநின் றேயமர்ந்தாய்
உன்னுசிறு பொழுதாறு ளொன்றாய வைகறையி
லுறக்கமது நீத்தெழுந்தே
பற்றுலக் கிப்புனித நீராடி விதிப்படி
பலப்பல நித்யகன்மம்
பண்புட னாற்றியே கண்டிகை திருநீறு
பாங்குள ஆறெழுத்துக்
கற்றுள் முறையின்வழி புனைந்தணிந் தோதியே
கல்லுமுரு கக்கசிந்து
கனிவுட னினையிறைஞ் சிப்பாடு மடியார்கள்
கன்மநீப் பவனுநீயே
சற்றுமே குணனிலாச் சழக்கர்தஞ் சேர்க்கையெற்
சாரா தருள்புரிகுவாய்
சார்வுற்ற சூர்முற்ற வோர்கொற்ற வேற்செற்ற
சமயசங் கிலிமுருகனே. 5.

மொழிவாத தர்க்கமிடு மூடர்தங் கொள்கையை
முற்றக் களைந்தெறிந்தே
மூதறிவின் மாட்சிகொடு மேன்மையாந் தமிழ்மொழியின்
முந்தை யிலக்கணத்தை
வழிவாய்மை கொண்டநடு நிலையான வடமொழியின்
வகைந்துள விலக்கணத்தின்
வழியாக வாராயி னன்றியிதன் மாண்பெலாம்
மதிவலிகொண் டுணர்வாரியார்?
பொழிவாய சொற்கட்டு முறையான வாராய்வும்
பொருந்துமா றுன்னுகிற்பிற்
புனிதமிகு மிவ்விரு மொழிகளிற் புகுபுலமை
புல்லலே யெ[illegible]றிறப்பேங்
தழிஞ்சியா தியபொருளைத் தழுவியவெந் தமிழ்மொழியின்
றனிவளந் தந்தகுமரா!
சார்வுற்ற சூர்முற்ற வோர்கொற்ற வேற்செற்ற
சமயசங் கிலிமுருகனே. 6.

எம்பிரான்! நின்கருணை யெளியேனை யளிக்குமென்
றெண்ணியே யமைந்திருந்தும்
ஈதென்ன மாயமோ! முன்னையென் கன்மமோ!
விருந்தெனைச் சூழ்ந்துகொண்டே
வம்பியற் கைதவம் பட்டிமை பலபயிலும்
வஞ்சக ஞாதியானோர்
வயிற்றகங் குடைதல்கை காற்சோர்வு துயின்மந்தம்
மனமயங் கிப்பேதுற
லம்பியலு முடலம்போற் குடலுளைதன் முதலாய
வளக்கொணாத் துன்பிழைக்கு

மரியபல மருத்திடு நேடியே யுணவினு
ளமைத்துப் புகுத்திவிடவே
சம்பிரங் கொண்டரிய முத்துப் பண் டாரத்தின்
சதூரறி வாற்பிழைத்தேன்
சார்வுற்ற சூர்முற்ற வோர்கொற்ற வேற்செற்ற
சமயசங் கிலிமுருகனே. 7.

குமர! நினை நம்பினோர் விடுபடுத லில்லெனுங்
கோடனைப் பின்னுமோர்ந்தேன்
குத்திரச் செயல்வினை பொத்தறிவின் குண்டர்சிலர்
கூடியே கொலைவிளைக்கக்
கமர்புரைய மனமுறியு மாறுபல் மருத்திடு
கவலுறக் கைக்கொண்டெமைக்
கள்ளத்தனஞ்செய்து மெள்ளவுள் ளூண்டியினுட்
கபடமார்க் கத்தினாலே
யமர்ந்திடப் புரியவே சின்னாளி லதுதெரிந்
தனனெயாய் வெதும்பியுள்ள
மரியவே தனையுண்டு முற்சொன்ன வற்கொண்டெ
மாருயி ருய்யலானேஞ்
சமரபுரி யிறைவ! விவை செயவலவ னீயலது
தாமொருவர் புரியவசமோ?
சார்வுற்ற சூர்முற்ற வோர்கொற்ற வேற்செற்ற
சமயசங் கிலிமுருகனே. 8.

ஆரியமென் முன்மொழியை யரியதமிழ் மொழியுட
னாய்ப் பயின் று பின்ன
ரறிவரிய மகிமைகொ ளகத்தியப் பெருநூலை
யகிலத் தவர்க்களித்த
சீரியத் குறுமுனியுஞ் செம்மைசே ருள்ளமதி
திருப்புகழ்ப் பாசுரங்க

டேக்கியே காலமுகிற் போலப் பொழிந்துலகின்
திணிமனத் தமமெறிந்தே
பேரியலு மோரருணை கிரிநாத ரும்ஔளவைப்
பெருந்தகையெம் பெருமாட்டியும்
பீடாருஞ் சங்கநக் கீரரும் பிரசகவி
பெரியபொய் யாமொழியருந்
தாரியற் பிரதாப வேள்குகா! நின்னருட்
டாவியன் றேசிறந்தார்?
சார்வுற்ற சூர்முற்ற வோர்கொற்ற வேற்செற்ற
சமயசங் கிலிமுருகனே. 9.

அடுத்துவந் தார்க்குதவு முள்ளமு மொருவருழை
யகலவிரி யாதகாமு
மாரியத் தொடுதமிழை யுலகுபோற் றிப்பின்ன
ரருநிந்தை புரியாவணந்
தொடுத்துமொழி நின்கருணை வெள்ளமும் முத்திவிளை
தூயவெண ணீற்றினன்புந்
தொண்டர்தமைக் கண்டுமன மண்டுகன விழுதுபோற்
றுவண்டே நெகிழ்ந்தியல்வன
கொடுத்துவந் தன்புட னருவிருந் தாற்றியே
குலவுமெய்க் குருசிவம்போற்
கொண்டாடு மாண்பினோ டாயவிக் குணங்களுங்
கொல்லாமை, யும்வாய்மையுந்
தடுத்துத்த கர்த்தசுரர்ப் பாற்றியோய்! வேண்டினேன்
றருவாய்நி னன்பருக்கே
சார்வுற்ற சூர்முறற வோர்கொற்ற வேற்செற்ற
சமயசங் கிலிமுருகனே. 10.

நூற்பயன்.

எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இலக்குமிச முத்திரமெ னுஞ்சமய சங்கிலியி
    லெழிற்சினக ரத்த மர்ந்த
வுலகுபுக ழெம்மன்னை சருவலோ கத்தலைவி
    யுடனுறைக வீற்றி ருக்கும்.
நிலவணியுஞ் சாம்பச தாசிவனை வள்ளிகுஞ்
    சரிவேளை நேர்ப ணிகுவோர்.
அலகில்செல் வம்பெற்றுப் பின்முத்தி யடைவார்க
    ளென்றே யறைகு வாமே.

உ

சிவமயம்.

இலக்குமி சமுத்திரமென்னுஞ் சமயசங்கிலி
ஸ்ரீ சர்வலோகநாயகியம்மை மாலை.

காப்பு.

இருவிகற்ப நேரிசை வெண்பா.

திருச்சமய சங்கிலிதி கழ்ந்திடவே சேரெஞ்
சருவலோக நாயகியாஞ் சாம்ப—கருணை
பிகைமீதோர் மாலைதனைப் பேச வருளாண்
டகைவேழத் தேவே சரண்.

நூல்.

அறுசீரடியாசிய விருத்தம்.

சீர்பெற் றோங்குந் தண்டலைக டிகழுஞ் சமய சங்கிலியி
லார்க ரந்தை யந்தும்பை யணியுஞ் சாம்ப சதாசிவனோ
டோர்விளங்க வெழுந்தருளு மெழிலம் பிகையே காத்தருளாய்
சார்க ருணையே மேனிகொளுஞ் சருவலோக நாயகியே. 1.

நாய கஞ்சேர் தனிப்பெருமை நன்னர்ச் செறிவுற் றிலங்கிடுந்தண்
பாய வரவோன் றமிழ்மொழியாற் பலவ ளஞ்சேர் பாசுரங்கள்
வாய மையப் பாடியநன் மதுரக் கவிஞரை யாதரிப்பாய்
தாயச் சமய சங்கிலியார் சருவ லோக நாயகியே. 2.

சங்க வளைக டரித்திடலாற் சாரூர கந்தன் மேற்கொளலா
லங்கண் மீன மாய்வரலாலாலி லையோனை நிகர்குமலைத்

துங்கப் பொன்னி யாற்றோடுந்தூய்நற் சமய சங்கிலியிற்
றங்கு மெம்மைப் புரந்திடுவாய் சருவ லோக நாயகியே. 3.

வாய்த்த பவளம் போல்வாயும் வளர்கு வளையை நிகர்விழியுஞ்
சேய்த்த மதிமா னும்முகமுஞ் சிறந்த விற்பு றைநுதலு
மாய்த்த மிற்சேர்ந் துடன்மிளிரு மாட்சி சமய சங்கிலியிற்
சாய்த்த மரம்போல் வினையகற்றுஞ் சருவ லோக நாயகியே. 4.

வினையை யகற்ற வேண்டுமென்பர் விரும்புஞ் சமய சங்கிலியிற்
றினையி னளவா யன்பாற்றித் திகழி னும்ப னைபோலேற்
றனைநீ யளிக்கு மருண்மாட்சி யதனுக் குவமை வேறுண்டோ?
தனையோர் பொருளு நிகர்க்ககிலாச் சருவ லோக நாயகியே. 5.

நிகர்ப்பாய் மாசில் மரகதத்தை நீல மணியைக் கருங்குன்றைப்
புகரில் பணைசேர் காயாவைப் பொருத்த முறவே யென்னலெலாந்
தகவார் முகம னுரைகளாற் சற்று முண்மை யல்லவியத்:
தகுஞ்ச மயசங் கிலியேறு சருவ லோக நாயகியே. 6.

ஏறு கந்த வெம்பெருமாற் கிரும்பூ சனையை யியற்றுமுறை
நாறு மலர்க்கு ழற்றேவி! நன்கு தெரித்தாய் காஞ்சியிலே
வீறு தோன்ற நீபுரிந்தே விழவார் சமய சங்கிலியிற்
சாறு காட்டு நறுங்கரும்பே! சருவ லோக நாயகியே. 7.

கரும்பு போலு மின்மொழிகள் கனிந்த வன்பார் நன்னெஞ்ச
மரும்பு வாய்மை யருநன்றி யறித லீச னடியாரை
விரும்பு நேய மிவையருள வேண்டுஞ் சமய சங்கிலியிற்
றரும்பு கலுக்கோர் சார்விடமே! சருவ லோக நாயகியே. 8.

விடமார் மிடற்ற னடலங்கம் விரும்பி யுறையு மருமருந்தே!
சடமா ருடலி னிழிவறிந்தே சார்ந்து நின்னைப் போற்றுமெனைத்
திடமாய்ப் புரக்க வேண்டுகின்றேன் றெய்வ மங்க லம்பொலியுந்
தடமார் சமய சங்கிலிசேர் சருவ லோக நாயகியே. 9.

சேரு மகிலாண் டங்களெலாந் திகழ வீன்று முதிராமே
யாருங் கன்னி யிளமைவள மமையு மெங்கள் சிவக்கொழுந்தே!
சீருஞ் சிறப்பு நறுந்தமிழுஞ் செழிக்க வருள்வாய் பூம்பொழில்கள்
சாருஞ் சமய சங்கிலியார் சருவலோக நாயகியே. 10.

பயன் (கலித்துறை.)

தண்பொ ழிற்செறி பதியெனுஞ் சமயசங் கிலியில்
வண்பி றையிறை யுடனமை வல்லியா மெங்கள்
கண்ணே நேர்சரு வலோகநா யகிதமிழ் கனிந்த
நண்ணு மாலையை நயப்பவர் நணுகுவர் நலமே.

இந்நூல் கிடைக்குமிடம்:—

பண்டிதர். ரா. திம்மப்ப ஐயர்.

தமிழ்ச் சொற்பொழிவாளர்,

முனிசிபல் கல்லூரி,

அரசமரத்தெரு, சேலம்.